# இளைய தமிழ்

*(படிக்க: இளைஞர்களைக் கவரும் தமிழ்)*

தமிழ்மொழியானது பிறப்பு முதல் ஒருவரின் வாழ்வோடு பின்னிப் பிணைந்து வருகிறது. வாழ்க்கையின் ஒவ்வொரு காலகட்டத்திலும் தமிழ் இலக்கியத்தின் அறிமுகம் மறைமுகமாக நடைபெறுகிறது. அந்த அழைப்பை ஏற்று மொழியை சுவைக்கக் கற்றுக் கொள்ளலாம்.

பிள்ளைப் பிராயத்தில் பெற்றோர் குழந்தையை இடுப்பில் வைத்துக் கொண்டு இறைவழிபாட்டை மேற்கொள்வர்.

*வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன் மிக நல்ல வீணை தடவி*

*மாசறுதிங்கள் கங்கை முடிமேல் அணிந்து உளமே புகுந்த ததனால்*

*ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி பாம்பிரண்டு முடனே*

*ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியா ரவர்க்கு மிகவே............* ***திருச்சிற்றம்பலம்***

அக்குழந்தை வீட்டில் அண்ணன், அக்காள் சொல்லித் தந்த கிழமைகளின் வரிசை பாட்டில் வருவதை இனம்கண்டு மகிழும். பள்ளி சென்றதும், திருக்குறளை

*கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்*

*குறுகத் தறித்த குறள்*

என்பதிலுள்ள நுட்பம் வியக்கவைக்கும். திருவிளையாடற் புராணத்தில்,

*பொங்கரில் நுழைந்து வாவி*

*புகுந்து பங்கயந் துழாவி*

*பைங்கொடி மயிலை முல்லை மல்லிகைப் பந்தர் தாவி*

*கொங்கலர் மணங்கூட் டுண்டு அங்கங்கே கலைகள் தேறும்*

*அறிவன் போல இயங்குமன்றே*

என்ற மனப்பாடச்செய்யுளின் சந்தம் சிறுவர் சிறுமியரை கிறங்கடிக்கும். சற்றே வயதேறி, வாலைப்பருவத்தில் பாரதியின் ‘பாஞ்சாலி சபதத்தை’ பள்ளிநாடகமாக அரங்கேற்றுகையில்,

*நன்றி கெட்ட விதுரா சிறிதும் நாணமற்ற விதுரா*

*தின்றிடும் உப்பினுக்கே நாசம் தேடுகின்ற விதுரா*

என நறநறவென்று பல்லைக் கடித்துக்கொண்டு துரியோதனன் பேசக்கூடியதையும், கண்களில் கனல் கக்க பாஞ்சாலி தலைவிரி  கோலமாய்,

*பாவிதுச் சாதனன் செந்நீர் அந்தப் பாழ்த் துரியோதனன் ஆக்கை இரத்தம்*

*மேவி இரண்டும் கலந்து குழல் மீதினிற் பூசி நறுநெய்குளித்தே*

*சீவிக் குழல் முடிப்பேன்யான் இது செய்யும் முன் னேமுடி யேன்*

என்று உரைக்கக்கூடியதும்  மறக்க முடியாத ஒன்றாகும்.

திருக்குறளில் அறத்துப்பாலையும், பொருட்பாலையும்  பள்ளியிலே கற்பிப்பர். இன்பத்துப் பாலை ஒருவர் தனியாகத்தான் அமர்ந்து படித்தறிய வேண்டும் அல்லது இனிய இல்லறத்திலே இருவராய் பொருள் அறியலாம்:

*கண்டு கேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்*

*ஒண்டொடிர்க் கண்ணே யுள*

...ஐம்புலன்களுக்கும் இன்பம் தரக்கூடிய ஒருவகை, ஒளிரும் வளையல்களை அணிந்த இப்பெண்ணிடம் இருக்கிறது.

பின்னர், ‘காதலில்லாத வாலிபமா ? எனக் கண்ணதாசன் குறிப்பிடும் அந்த பருவத்தில், பதினோராம் வகுப்பில்  பொருத்தமாக  இரு அகப்பாடல்கள் உண்டு:

*....கைஇல் ஊமன் கண்ணின் காக்கும்*

*வெண்ணெய் உணங்கல் போல*

*பரந்தன்று இந்நோய் நோன்றுகொளற் கரிதே*

மற்றொரு பாடலில்:  கடுமையான கோடையில், கலைமானும் பிணைமானும் தாக வேட்கையில் அலைகையில்,  நீர் சிறிதளவே இருக்கும் சுனையை அடைகின்றன.  இருவர் தாகம் தணிக்க அது

போதாது. எனவே கலைமான், தன் பிணைமான் இனிதுண்ணட்டும் என்றெண்ணி உறிஞ்சுவது போல் நடித்ததாம்:

*.....சுனைவாயச்சிறு நீரை எய்தாதென் றெண்ணி*

*பிணைமான் இனிதுண்ண வேண்டி.......'*

கல்லூரிப் பருவத்தில், வகுப்பில் கற்கும் தமிழ் குறைந்து, திரைத்தமிழில் கற்கும் தமிழ் அதிகரிக்கிறது.

*உன்னை முதன் முதலாகப் பார்க்கிறேன் ஒன்று கேட்கிறேன் என்னைத் தெரிகிறதா ? ஜென்ம ஜென்மமாய் வந்த காதலை அந்த நேசத்தை மனம் அறிகிறதா ?*

என்பதில் உள்ள புதுமையும்,

*சூரியனை சூரியனை சுருக்குப்பையில் நான் அள்ளிவர அள்ளிவர காத்திருந்தேன்*

*சிங்கத்தையும் சிங்கத்தையும் சிலநாளா என் சின்னச்சின்ன கம்மலுக்குள் பூட்டிவச்சேன்*

என்பதன் கருத்துச் செறிவும் பிரமிக்கவைக்கின்றன.

தமிழ் ஒன்றுதான்! அது தோண்ட தோண்ட ஊற்றெடுத்து ஒவ்வொரு காலகட்டத்திலும் அந்த மொழியை காதலிக்கும் வாசகர்களையும் கவிதை எழுத தவித்திருக்கும் யாசகர்களையும் அமுத சுரபியாய் அழைக்கிறது. வெறும் 26 எழுத்துக்களால் ஆன ஆங்கிலமே இன்று உலகமொழியாய் உலவுகையில், 247 எழுத்துக்கள் கொண்ட தமிழ், விசுவரூபமெடுத்து உலகளாவ வரவேண்டும். சுயம்புவாய் பிறந்த செம்மொழி தரணியை வலம்வர தமிழின் பயன்பாடு மேலும் கையகமாக வேண்டும்.

*மங்கல அணியும் பொட்டும் மரகத மணிபோற் கண்ணும்,*

*மஞ்சள் தங்கிய முகமும் செவ்வாய்த் தடம்பணைத்தோளும்......*

என அன்று புலவர் பாடிய அழகுத் தமிழணங்கை மேலும் அணி செய்யவேண்டும்.தமிழ் வளர்க்க வேண்டும். தமிழ் பரப்ப வேண்டும். பண்டைத் தமிழ் இலக்கியங்களில் மூழ்கி முத்தெடுக்க வேண்டும். இக்காலத்தின் தேவைக்கேற்ப மொழி பெயர்த்து, மொழி விரிய வழிவகை செய்ய வேண்டும்.

**குறிப்புகள்:**

1. வேயுறு தோளி பங்கன்: திருவாசகம் - மாணிக்கவாசகர்
2. பொங்கரில் நுழைந்த வாவி: திருவிளையாடற்புராணம்- பரஞ்சோதி முனிவர்
3. கண்டுகேட்டு - திருக்குறள் –இன்பத்துப்பால் – புணர்ச்சி மகிழ்தல் 111:17
4. கைஇல் ஊமன்- குறுந்தொகை 58ம் பாடல் –வெள்ளிவீதியார்
5. சுனைவாய்ச்சிறு நீரை – குறுந்தொகை
6. உன்னை முதன்முதலாக – படம் : தாஜ்மகால் – பாடலாசிரியர் : பா.விஜய்
7. சூரியனை சூரியனை – படம்: அய்யா - பாடலாசிரியர்: பா.விஜய்
8. மங்கல அணியும் பொட்டும்- சிலப்பதிகாரம்( ?)


மு.ரா. தேவிகா,
மாவட்டத் திட்ட கூறு ஒருங்கிணைப்பாளர்,
அனைவருக்கும் கல்வி இயக்கம்,
பழைய மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,
சேலம் – 636 001
அலைபேசி– 9788858934, 9943132779